அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்

அரண்வாயல் குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 602 025

சுற்று மடல் எண்: **015/2023** நாள்: 02.02.2023

**'சலனமில்லா மனதினிடம் இந்தப் பிரபஞ்சம் தன்னைக் கையளிக்கின்றது' – லாவோட்சே**

## என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.**

இன்று **பிப்ரவரி 02** –ஆம் நாள்
ஆண்டவர் இயேசு கோவிலில்
காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள்.
துறவிகளாகிய நமக்கு இன்று அர்ப்பண நாள்.
இந்த அர்ப்பண நாளில் நாம் கொடுத்த
அர்ப்பணத்தைத் தியானித்துப் பார்ப்போம்.

இன்றைய உலகில் மிக அதிகமாக
உதாசீனப்படுத்தப்படுவது அர்ப்பணம்தான்.
எல்லாத் தளங்களிலும் அர்ப்பணத்தின் சாரம்
மிகவே குறைந்து வருகிறது.
குடும்பத்தில் திருமண பந்தத்தின் அர்ப்பணம்
மிக அதிகமாக மண முறிவில் முடிகிறது.
வேலை செய்யும் அலுவலகங்களில் நிறுவனத்திற்கான
அர்ப்பணிப்பு மிகமிகக் குறைந்து வருகிறது.
நட்பில் பிரமாணிக்கமின்மை, நம்பிக்கையில் துரோகம்,
அரசு அமைப்புகளில் நம்பிக்கையற்ற தன்மை,
உறவுகளில் நம்பிக்கைக் குறைவு,
துறவறத்தில் அர்ப்பணத்தின் சாரம் இழந்த நிலை
இப்படி அர்ப்பணத்தின் தன்மை நமக்குக் கவலையளிக்கிறது.

இந்தச் சூழலில் நாம் ஏற்றுக்கொண்ட அர்ப்பண வாழ்வுக்கு
எந்த அளவு உண்மையாக இருக்கிறோம்

என்ற சுய பரிசோதனைக்கு
அர்ப்பண நாள் நம்மை அழைக்கிறது.
அர்ப்பணத்தில் பிரமாணிக்கமாக இருக்க வேண்டும்
என்பதற்காக நம் பெற்றோர்
**“நீ முன் வைத்த காலை பின் வைக்கக் கூடாது”**
என்று சொல்லித்தான் துறவு வாழ்வுக்கு
நம்மை அனுப்பி வைத்தார்கள்.
ஆனால் இன்று பிடிக்காவிட்டால் வந்துவிடு
என்று சொல்லும் பெற்றோர் எண்ணிக்கை
அதிகமாகி வருகிறதல்லவா? என்னதான் நடந்தாலும்
நான் கடவுளுக்குக் கொடுத்த அர்ப்பணத்தில்
எப்போதும் பிரமாணிக்கமாய் இருப்பேன்
என்ற உள்ள உறுதியும் பல தளங்களில்
கேள்விக்கு உட்படுத்தப்படுகிறதே.

மலைபோல் துன்பங்கள் கூட
நம்மை நிலைபெயரச் செய்யாத நிலைமாறி
கடுகளவு துன்பங்கள் கூட நம்மைத்
தடுமாறச் செய்ய போதுமானதாகி விடுகிறதல்லவா?
எல்லா வசதிகளும் கிடைப்பதா அர்ப்பணம்?
இல்லாமையில் இன்பம் காண்பதுதானே அர்ப்பணம்.
உழைக்காமல் சொகுசாக வாழ்வது அர்ப்பணமா?
ஓயாமல் உழைப்பதும் இறைவனுக்காக
மகிழ்ச்சியோடு உழைப்பதும் தானே அர்ப்பணம்.

ஓய்வு, வசதி, வாய்ப்புக்கள், ஆடம்பரம்
தேவைகள், சுயநிறைவு இவைகளால்
நம் அர்ப்பணம் இன்று அமோகமாக இருக்கிறது.
வசதிக் குறைவு, பிரச்சினைகள், நெருக்கடி, சிறு சங்கடங்கள் கூட
நம் அர்ப்பணத்தை கலங்கச் செய்கின்றன.
இதற்கு என்ன காரணம் என எண்ணிப் பார்ப்போம்.

நம் அர்ப்பணம் ஆண்டவரில் ஊன்றியிருந்தால்
அவருக்காகவே என் வாழ்வு என்ற புரிதல் இருந்தால்
வேறு எக்காரணங்களும் நம்மில் ஊடுருவாமல் இருந்தால்
எதைச் செய்தாலும் என் ஆண்டவர்

இயேசுவுக்காகவே என்ற தெளிவு இருந்தால்
வாழ்வதும் இருப்பதும் இயங்குவதும் அவருக்காகவே
என்ற உறுதி இருந்தால்
அர்ப்பணத்தில் நாம் வேரூன்றியிருப்போம்.

எதிர்பார்ப்புகளோடு வாழ்ந்து அவை கிடைக்காமல்
ஏமாந்து விரக்தியில் வாழ்வைக் கழிப்பதும்,
உணர்வு முதிர்ச்சியின்றி வன்மம், கோபம்,
பகையோடு வாழ்வதும் எதிலும் நிறைவின்றி
அலுத்துக் கொண்டு இருப்பதும்
அர்ப்பணத்தின் அழகைக் குலைத்துவிடும்.

அர்ப்பணம் அழகாக இருக்க
அன்பு, தியாகம், ஈடுபாடு, மனஉறுதி,
தியானம், மனிதநேயம், உழைப்பு ஆகிய
பண்புகளால் கட்டியெழுப்பப்பட வேண்டும்.
நம் அர்ப்பணத்தை உணர்ந்து வாழ
பிரமாணிக்கத்தில் வேரூன்றியிருக்க
ஆண்டவரில் பற்றுருதியோடிருக்க
இந்த அர்ப்பண நாளில் உறுதி ஏற்போம்.
**நெஞ்சம் நிறைந்து அர்ப்பண விழா**
**நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## சகோதரிகளின் கவனத்திற்கு:

## MEETING FOR SCHOOL SISTERS:

***ESI, EPF, TDS, Accounts and Auditing*** பற்றிய தெளிவுகள் பெற நமது கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் நம் சகோதரிகளுக்கு கருத்தமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **நாட்கள்** | : | **பிப்ரவரி 19, 20** |
| **இடம்** | : | **சபைத் தலைமையகம்** |
| **கருத்துரையாளர்** | : | **அருட்திரு. சேவியர் பாக்கியம் ச.ச** |
| **பங்குகொள்வோர்** | : | **பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.** |

## SYMPOSIUM FOR THE SPIRITUAL DIRECTORS:

நிரந்தர அர்ப்பணம் அளித்தாலும் தொடர் உருவாக்கம் தேவை என்பது நமது பொதுப் பேரவையில் அதிகம் உணரப்பட்டது. எனவே நிரந்தர அர்ப்பணம் அளித்து 14 ஆண்டுகள் வரை உள்ள நம் சகோதரிகளுக்கு ஆன்மீக வழிகாட்ட 10 அருட்சகோதரிகளைத் தேர்ந்தெடுத்து மைய நிர்வாகக் குழு, ஆன்மீக வழிகாட்டி பயிற்சியளிக்க முடிவெடுத்துள்ளது. அந்த 10 அருட்சகோதரிகளுக்கான பயிற்சிப் பாசறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **நாட்கள்** | : | **பிப்ரவரி 21,22,23** |
| **இடம்** | : | **சபைத் தலைமையகம்** |
| **கருத்துரையாளர்** | : | **அருட்திரு. பிரிட்டோ பீட்டர் சே.ச.** |

**பங்குகொள்வோர்:**

01. 0607 Mother Lourdu Mary
02. 0586 Sr. Purana Alphonsa
03. 0658 Sr. Joseph Celine
04. 0684 Sr. Angelina
05. 0702 Sr. Nesa Soundaram
06. 0710 Sr. N.M. Clara
07. 0772 Sr. Sagaya Mary
08. 0808 Sr. Clara Sagaya Mary
09. 0854 Sr. Maria Antony Terencia
10. 1065 Sr. Roseline Malarvizhi

## ஆன்மீக வழிகாட்டுதல் பெறுவதற்கான பயற்சி:

- ஏற்கனவே குறிப்பிட்டது போல் நிரந்தர அர்ப்பணம் அளித்த பின்னும் தொடர் உருவாக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள நம் சகோதரிகளுக்குப் பயிற்சி ஏற்பாடு செய்யப்படடுள்ளது. தொடர் வழிகாட்டுதல் அர்ப்பண வாழ்வில் ஆழம் பெற சகோதரிகளுக்கு உறுதுணையாயிருக்கும்.

| | | |
|---|---|---|
| **நாட்கள்** | : | **பிப்ரவரி 24,25** |
| **இடம்** | : | **சபைத் தலைமையகம்** |
| **கருத்துரையாளர்** | : | **அருட்திரு. பிரிட்டோ பீட்டர் சே.ச.** |
| **பங்குகொள்வோர்** | : | **பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.** |

- கருத்தரங்குகளில் கலந்து கொள்ளும் சகோதரிகள் கருத்தரங்கு தொடங்கும் நாளில் காலை 8.30 மணியளவில் மையத்தில் இருக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கருத்தரங்கின் இறுதி நாள் மாலை 4.30 மணிக்கு கருத்தரங்கு நிறைவு பெறும்.
- அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெற வேண்டுகிறேன்.

**இந்த ஆண்டின் பொன்விழா மற்றும் வெள்ளி விழாக் கொண்டாட்டங்கள்:**

இந்த ஆண்டு **பொன் விழா மே 03 -ஆம் நாள் அன்றும் வெள்ளி விழா மே 04 -ஆம் நாள்** அன்றும் நமது விளார் பான் செக்கர்ஸ் கல்லூரியில் கொண்டாடப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## Holy Land திருப்பயணம் பற்றி:

- பல சகோதரிகள் திருப்பயணம் செய்வதற்குப் பெயரைப் பதிவு செய்திருக்கிறீர்கள். மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.
- பெயர் கொடுத்துள்ள சகோதரிகள் நீங்களாகவே Passport -க்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். நீங்கள் ஆதார் எங்கு வைத்திருக்கிறீர்களோ அங்கே தான் Passport -க்கு Apply பண்ண வேண்டும். எனவே விரைவாக Passport -க்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.
- உடல் நலக் குறைவான, நடக்க இயலாத பல்வேறு Health Complaints உள்ள சகோதரிகள் உங்கள் ஆவலை எழுதியுள்ளீர்கள். ஆனால் Agency, Medical Fitness கொடுத்தால் மட்டும் தான் நீங்கள் செல்ல இயலும். நீங்கள் விரும்பினாலும் மருத்துவக் குழுவின் அனுமதியின்றி நீங்கள் Holy Land செல்ல இயலாது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.
- யார் உதவியும் இல்லாமல் நம் Luggage -யை எடுத்துக் கொண்டு நடந்து செல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.
- தொடர்ந்து Sedative drugs எடுப்பவர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்.
- Heart Problem உள்ளவர்களும் மருத்துவரின் ஒப்புதல் இன்றி செல்ல இயலாது.
- மேற்கூறிய பிரச்சினைகள் உள்ளவர்கள் குழுவில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் வருத்தப்படாமல் வாழும் இடத்தை **Holy Land** ஆக மாற்றுங்கள்.
- ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களின் பெயர் பட்டியல் விரைவாக அனுப்பப்படும்.

**சபைத் தலைமை அன்னையின் 2023 பிப்ரவரி மாதப் பணித்திட்டம்:**

| | | |
|---|---|---|
| 01 | - | ஆழ்வார்பேட்டை |
| 02 | - | சென்னை மயிலை ஆயரோடு கலந்துரையாடல் |
| 03 | - | திண்டுக்கல் ஆயரோடு கலந்துரையாடல் |
| 04 - 07 | - | சென்னை மயிலை மறைமாவட்ட நிர்வாகத்தோடு பூவிருந்தவல்லி, Little Mount நிலங்கள் பற்றிய கலந்துரையாடல். |
| 08 - 10 | - | தமிழ்நாடு தனியார் பள்ளிகளுக்கான ஒழுங்குமுறை சட்டத்திற்கு நீதிமன்ற நிவாரணம் பெற பல்வேறு கலந்துரையாடல்கள் தயாரிப்புக் கூட்டங்கள். |
| 11 - 18 | - | ஆண்டு தியானம். (ஆண்டு தியான நாட்களில் என்னைத் தொடர்பு கொள்ள வேண்டாம். உங்கள் மாநிலத் தலைவிகளோடு தொடர்பு கொள்ளவும்.) |
| 19 - 26 | - | பல்வேறு கருத்தரங்குகள் - சபைத் தலைமையகம் |
| 27 - மார்ச் 01 | - | தனிப்பட்ட தியானப் பயிற்சி |

**உங்கள் அனைவருக்கும் என் அன்பும் செபமும் உரித்தாகுக!**

**பிரபஞ்சப் பேரன்பில்,**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**